## நமீபியா



# தேவன் பேசினார், பாவத்தை வெறுத்தேன்

*வாரங்கள் கடந்தன. தான் சரியான வாழ்க்கை வாழவில்லை என்கிற உணர்வு உண்டானது.*

நமீபியா காடுகளில் ஹிம்பா என்கிற இனமக்கள் வாழ்கிறார்கள்; இவர்கள் பகுதியளவு நாடோடிகள். அதாவது, நீண்டகாலம் நீடிக்கிற வெயில் காலத்தில் தங்கள் கால்நடைகளை மேய்ப்பதற்காக தண்ணீர் இருக்கிற இடங்களுக்கு இடம்பெயர்ந்துகொண்டே இருப்பார்கள். மழைக்காலம் குறைவாகவே இருக்கும்; அப்போது இரண்டு மூன்று குடிகல்களுடன் அமைந்துள்ள தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பி, மக்காச்சோளம் போன்ற பயிர்களைப் பயிரிடுவார்கள். அது அந்த வருடம் முழுவதும் அவர்களது உணவுத் தேவைக்குப் போதுமானதாக இருக்கும்.

ஹிம்பா இனத்தவர்களில் ஞானஸ்நானம் பெற்று செவந்த்–டே அட்வென்ட்டிஸ்ட் சபையில் சேர்ந்துள்ள ஒரு சிலரில் ஊபாஹூருவும் ஒருவர். 1993ம் ஆண்டு எடுக்கப்பட்ட பதின்மூன்றாம் வாரக் காணிக்கையின் ஒரு பகுதியின் உதவியால் நடத்தப்பட்ட சுவிசேஷக்கூட்டத்தில்தான் அவர் முதன்முதலாக தேவனைப்பற்றிக் கேள்விப்பட்டார். அவரது சம்பவம் இதோ.

ஊபாஹூரு ஹிம்பா இனத்தைச் சேர்ந்த வாலிபராக இருந்தார். அந்த இனத்தவருக்கே உரிய வழக்கத்தின்படி திருடினார், சண்டையிட்டார், குடித்தார். பெரும்பாலும், இந்த மூன்று பழக்கங்களும் அவரிடம் சேர்ந்தே காணப்படும்.

ஆடுகள், கால்நடைகள், மக்காளச்சோள மகசூல் என ஹிம்பா இன மக்களுக்கு உணவுப்பற்றாக்குறைக்கு வழியே இல்லை. அதனால் அவர்களுக்கு பணம் அதிகம் தேவைப்படுவதில்லை. ஆனால் நமீபிய அரசு, மாதம் ஒருமுறை ஹம்பா இனத்தவர்களுக்கு முதியவர்கள் ஊக்கத்தொகை வழங்க ஆரம்பித்தபிறகு, பண மோகம்

Uapahurua (OO-apa-hoor-oo-a) ஊபாஹூரு

அந்தச் சமூகத்தினருக்குள்ளும் புக ஆரம்பித்தது. பணம் வந்ததும், ஹிம்பா இன வாலிபர்கள் தங்கள் பெற்றோரிடம் சென்று, தாங்கள் குடிப்பதற்காக பணம் கேட்பார்கள். குறுவியாபாரிகளும்கூட ஹிம்பா இனத்தவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கப்படுகிற தேதியைக்கணக்கிட்டு, அவர்களுடைய பகுதிகளுக்கு அருகே சென்று மது பானம் விற்பனை செய்வார்கள்.

குடிப்பழக்கம் ஆரம்பித்துவிட்டால், சண்டையையும் தவிர்க்க முடியாது. ஒரு சமயம், ஹிம்பா இனத்தைச் சேர்ந்த ஒரு வாலிபன் குடி போதையில், தன் வழியில் நின்ற இன்னொரு வாலிபனை "தள்ளிப் போ, நான் போகவேண்டும்" என்று சொல்லி தள்ளிவிட்டதை ஊபாஹூரூ பார்த்துகொண்டிருந்தார். அந்த இரண்டு வாலிபர்களுக்கும் சண்டை உண்டாக ஆரம்பித்தது. மற்ற வாலிபர்களும் அந்தச் சண்டையில் கலந்துகொண்டார்கள். இறுதியில், அது கத்தி எடுக்கிற அளவுக்கு சண்டை பெரிதானது.

ஊக்கத்தொகை இல்லாத நேரங்களில் சில வாலிபர்கள் திருடுகிற வேலையில் ஈடுபடுவார்கள்.

ஒரு சமயம் பல வாலிபர்கள் சேர்ந்து ஒரு பசுவின் தோலை உறித்துக்கொண்டிருந்ததை ஊபாஹூரூ பார்த்துவிட்டார். அவர்களிடம், "இது யாருடைய பசு" என்று கேட்டார்.

"இது எங்களுடையது" என்று ஒரு வாலிபன் சொன்னான்.

"இது தானாக இறந்த பசு" என்று இன்னொருவன் சொன்னான்.

அந்தப் பசுவை ஊபாஹூரூ உன்னிப்பாகக் கவனித்தார். ஹிம்பா இனத்தவர்களில் ஒவ்வொரு குடும்பத்தினரும் தங்கள் பசுக்களை அடையாளம் காண்பதற்கு அவற்றின் காதுகளில் கத்தியால் அடையாளமிட்டிருப்பார்கள். அந்தப் பசுவின் காதிலும் அப்போதுதான் போடப்பட்ட அடையாளக் குறி இருந்தது.

ஹிம்பா தலைவர்கள் அது குறித்து விசாரித்துப் பார்த்தபோது, அந்தப் பசுவை அந்த வாலிபர்கள் திருடி, அதன் இறைச்சியை விற்று, மதுபான வாங்குவதற்கு அவர்கள் திட்டமிட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அந்தப் பசுவின் உரிமையாளருக்கு நஷ்ட ஈடு வழங்குமாறு அந்த வாலிபர்களுக்கு உத்தரவு போட்டார்கள்.

ஊபாஹூரூவின் வாழ்க்கையிலும் குடி, சண்டை, திருட்டு போன்றவை சகஜமாக இருந்த சமயத்தில் தான் செவந்த்-டே அட்வென்டிஸ்ட் போதகர் ஒருவர் அவருடைய குடிசைக்குச் சென்றார். 1993ம் ஆண்டு எடுக்கப்பட்ட ஒரு பதின்மூன்றாம் வாரக் காணிக்கையின் உதவியால் நடைபெற்ற ஒரு ஊழியத்திட்டத்தின்கீழ் அங்கு அவர் சென்றிருந்தார்.

தேவனைப்பற்றி அவர்களுக்குச் சொன்னார். ஊபாஹூரூ தேவனைப்பற்றி இதற்குமுன் கேள்விப்பட்டதே இல்லை; அதனால் போதகர் சொன்னதை ஆர்வத்தோடு கேட்டார்.

அந்த வாரத்தின் ஓய்வுநாளில் ஒரு மரத்தின் அடியில் வைத்து அந்தப் போதகர் ஆராதனை நடத்

தினார்; ஊபாஹஒரு அந்த ஆராதனையில் கலந்துகொண்டார். ஹிம்பா இன மக்கள் தங்கள் பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்புகிற பழக்கம் இல்லை. அதுபோல ஊபாஹஒருவும் பள்ளிக்கூடம் சென்றதில்லை. அவருக்கு வேதாகமத்தை வாசிக்கத் தெரியாது. அதனால் போதகர் வேதாகமத்தை வாசித்தபோது, அதை உன்னிப்பாகக் கவனித்தார். உலகத்தையும், அதிலுள்ள மக்காச்சோளம், ஆடுகள், மாடுகள், ஹிம்பா இனத்தவர் உட்பட சகலத்தையும் சிருஷ்டித்த தேவனையும்பற்றி முதன்முறையாகக் கேள்விப்பட்டார்.

வாரங்கள் கடந்தன. தான் சரியான வாழ்க்கை வாழவில்லை என்கிற உணர்வு உண்டானது.

அந்தப் போதகரால் எல்லா வாரங்களிலும் அந்த மரத்தடியில் வைத்து ஆராதனைகளை நடத்த முடியவில்லை; அதனால் பக்கத்து நகரத்திலிருந்த அட்வென்ட்டிஸ்ட் சபையில் வாரந்தோறும் ஆராதனையில் கலந்துகொண்டார். ஓய்வுநாட்களில் அதிகாலையிலேயே எழுந்து ஏழு மணி நேரம் நடந்து, அந்த நகரத்தைச் சென்றடைவார்.

வேதாகம வசனங்களைக் கேட்டபோது, திருடுவதை வெறுத்தார். சண்டையிடுவதை வெறுத்தார். குடிப்பதை வெறுத்தார். தனக்குள்ளாக என்ன நடக்கிறது என்றே அவரால் புரிந்துகொள்ள முடியவில்லை. எந்த வசனம் தன் இருதயத்தைத் தொட்டதென்றே அவரால் சொல்லமுடியவில்லை. தேவனுடைய வார்த்தையைக் கேட்டார், பாவமான காரியங்கள்மீது அவருக்கு வெறுப்பு உண்டானது, அவ்வளவுதான். தன் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெற்றார்.

தேவனை தன் இரட்சகராக அவர் ஏற்றுக்கொண்டபோது அவருக்கு வயது 23. இன்று அவருக்கு வயது 46.

அது எளிதான பாதையாக இருக்கவில்லை. மீண்டும் பழைய வழிக்கே திரும்புவதற்கு பலமான பாவத்தூண்டல்கள் ஏற்பட்டன.

"கிறிஸ்தவராக இருப்பது கடினமாக இருக்கிறது. திருடாமலும், குடிக்காமலும், சண்டைபோடாமலும் இருப்பது கடினமாக இருக்கிறது, ஏனென்றால் அவை இங்கு வாழ்க்கையின் ஒரு பகுதியாக இருக்கின்றன" என்று சொன்னார்.

1993ம் ஆண்டு எடுக்கப்பட்ட ஒரு பதின்மூன்றாம் வாரக் காணிக்கையின் உதவியால்தான் ஹிம்பா மக்களுக்கு சுவிசேஷம் சொல்கிற ஒரு ஊழியத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அவ்வாறுதான் அந்தப் போதகதர் ஊபாஹஒருவின் வீட்டிற்குச் சென்றார். அந்தக் காணிக்கையின் உதவி ஊபாஹஒருவின் குடும்பத்திலும், அந்த இனத்தவரிலும் இன்று வரை உணரப்படுவதுபோல, இந்தக் காலாண்டில் நீங்கள் கொடுக்கப்போகிற பதின்மூன்றாம் வாரக் காணிக்கையும்கூடய, தேவனுடைய ஆசீர்வாதத்தால் நமீபியாவிலும் அதற்கு அப்பாலும் ஒரு நீண்ட, நீடித்த தாக்கத்தை உண்டாக்கப்போகிறது. செப்டம்பர் 27ம் தேதி தாராளமாகக் கொடுங்கள்.